கல்லூரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கலைக் கல்லூரிகளிலுள்ள எல்லாக் கலைப் பாடங்களும் வரும் முறை இல்லை. தமிழிலே மட்டும் பி.ஏ. முறை பல்கலைக் கழகத்தின் அனுமதியின் பேரில் நிறுவப்பட்டிருக்கிறது.

Strike by students of Government Arts College, Madras

* 34 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the Government Arts College, Madras was closed for many days due to the students strike during the month of December, 1969; and

(b) if so, what the grievances of the students are?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பின்வரும் கோரிக்கைகளுக்காக, வேலைநிறுத்தம் நடந்தது.

(1) ஆசிரியப் பயிற்சி (பி.டி.) வகுப்பில் பொருளியல் பட்டதாரிகளையும் சேர்த்துக்கொள்ள வகை செய்தல்.

(2) மிகுதியான வேலை வாய்ப்பு ஏற்படுத்தல்.

(3) எல்லா வேலையில்லாப் பட்டதாரிகளுக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகை அளித்தல்.

(4) உயர்நிலைப் பள்ளிகளில் பொருளியலை விருப்பப்பாடமாக ஏற்படுத்தல்.

Chairman of Sangeetha Nataka Sangam

* 35 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether a retired Principal of the Presidency College, Madras City has been appointed as the Chairman of the Sangeetha Nataka Sangam; and

(b) the grounds on which the selection has been made?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம் 1970, பிப்ரவரி 13-ம் நாள் முதல், மூன்றாண்டுக் கால அளவிற்குத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(இ) அந்தப் பதவிக்கு எவ்வித குறிப்பிட்ட தகுதியும் வரையறுக்கப்படவில்லை நிர்வாக அனுபவமிக்க டாக்டர் திரு. மணவாள இராமனுஜம் இந்தப் பதவியை வகிக்க சாலச் சிறந்தவர் என அரசு கருதியது.